## அயல்நாட்டிலிருந்து அன்பு உடன்பிறப்புகளுக்கு..

# தமிழ் மணம் வீசிய ஜெர்மனி

## உங்களில் ஒருவன் கடிதம்!... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

### ஆர்வத்துடன் குவிந்த முதலீடுகள்

NRW மாநில அரசின் சார்பில் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. அவரைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசின் சார்பில் தொழில்துறை செயலாளர் அருண் ராய் ஐ.ஏ.எஸ். பேசும்போது, இந்தியாவில் தமிழ்நாடு எந்தளவு பொருளாதாரத் துறையில் வளர்ந்துள்ளது என்பதையும், தேசிய சராசரியைவிடத் தமிழ்நாடு உயர்ந்திருப்பதன் காரணம், தொழில் வளர்ச்சிக்கேற்ற தமிழ்நாட்டில் உள்ள கட்டமைப்புகள் ஆகியவை பற்றி சிறப்பாக விளக்கி, முதலீடு செய்யும்படி கேட்டுக் கொண்டார். தமிழ்நாட்டில் ஏற்கெனவே முதலீடு செய்து, உற்பத்தியைத் தொடங்கியுள்ள நிறுவனங்கள் தங்கள் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டது, அங்கு வந்திருந்த முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கையை அதிகரிக்கச் செய்தது.

**தொழில் - உற்பத்தி - வர்த்தகம் மூன்றின் நுணுக்கங்களையும் நன்கறிந்திருக்கும் தொழில்துறை அமைச்சரான தம்பி டி.ஆர். பி.ராஜா பேசும்போது, “ஐரோப்பாவின் இதயத்துடிப்பாக ஜெர்மனி உள்ளது. அதுபோல இந்தியாவின் இதயத்துடிப்பு தமிழ்நாடு. இரண்டுமே உற்பத்தித் துறையை வளர்த்தெடுக்கும் அரசுகள். தமிழ்நாட்டில் நீங்கள் நம்பிக்கையுடன் முதலீடுகளை செய்யலாம்” என்று சொல்லி, கடந்த நான்காண்டுகால திராவிட மாடல் அரசில் தமிழ்நாடு பெற்றுள்ள வளர்ச்சியை சிறப்பாக விளக்கினார்.**

என்னுடைய முதல் ஜெர்மனி பயணத்தில் நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டு உரையைத் தொடங்கும்போது, இந்தியா எனும் மிகப்பெரிய ஜனநாயக நாட்டில் இருக்கிற தமிழ்நாடு என்கிற மாநிலத்தின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சராகப் பங்கெடுப்பதில் உள்ள மகிழ்ச்சியை அவர்களுடன் பகிர்ந்துகொண்டு, நான் வெறும் முதலீட்டுக்காக இங்கு வரவில்லை என்பதையும், ஜெர்மனி தமிழ்நாடு எனும் இரண்டு பொருளாதார அரசுகளுக்கிடையே பாலம் அமைக்க வந்திருக்கிறேன் என்பதையும் சுட்டிக்காட்டினேன். ஜெர்மனியைப் போலவே தமிழ்நாட்டிலும் திறன் மேம்பாட்டு மையங்கள் உருவாக்கப்பட்டு வருவதையும், நிறுவனங்களுக்கேற்ற திறனை ஊக்குவிக்கும் பயிற்சிகள் வழங்கப்படுவதையும் எடுத்துக்கூறி, தொழில்வளர்ச்சிக்குத் தேவையான அத்தனை வசதிகளையும் உங்களுடனான ஒரு பார்ட்னர் போல அரசு செய்து தரும் என்ற உறுதியை அளித்து, இந்தியாவின் ஜெர்மனியாக தமிழ்நாடு விளங்குகிறது என்ற நம்பிக்கையை விதைத்தேன்.

**இந்தியாவில் பல மாநிலங்கள் இது போன்ற முதலீட்டாளர் மாநாட்டிற்கு ஜெர்மனியில் முயற்சித்ததையும், நாம் நடத்திய முதலீட்டாளர் மாநாட்டில்தான் தமிழ்நாட்டில் இருக்கும் தொழிற்கட்டமைப்பை அறிந்து கொள்ள முடிந்தது என்றும் அங்கு வந்திருந்த முதலீட்டாளர்கள் தெரிவித்தனர்.**

எந்த நாட்டில் முதலீடுகளை ஈர்க்கிறோமோ அந்த நாட்டிற்கு, முதலீட்டாளர் மாநாட்டை நடத்தும் மாநிலத்தின் முதலமைச்சரே நேரில் வந்து முதலீட்டாளர்களிடம் விளக்கும்போதுதான் தெளிவும் நம்பிக்கையும் கிடைக்கிறது, அதன் மூலம் முதலீடுகளை ஈர்க்க முடியும் என்பதற்கு NRW மாநிலத்தில் நடந்த முதலீட்டாளர் மாநாடு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கும். **வெளிநாட்டுப் பயணங்கள் குறித்து அரசியல் காரணங்களுக்காக முன்வைக்கப்படும் விமர்சனங்களைப் புறங்கையால் ஒதுக்கிவிட்டு, தமிழ்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும், தமிழ்நாட்டில் உள்ளவர்களின் வேலைவாய்ப்புக்கும் தேவையான முதலீடுகளை இத்தகைய சந்திப்புகள் மூலம் ஈர்க்க முடிகிறது என்ற நிறைவு உங்களில் ஒருவனான எனக்கு ஏற்பட்டது.**

காலையில் நடந்த நிறுவனங்களுடனான சந்திப்பு, மாலையில் நடந்த முதலீட்டாளர் மாநாட்டின் மூலம் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் 26 நிறுவனங்களுடன் 15 ஆயிரத்து 320 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில் 7,020 கோடி ரூபாய் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

### பண்பின் சிகரமான மினிஸ்டர்-பிரசிடென்ட்

செப்டம்பர் 2 அன்று காலையில் NRW மாநிலத்தின் மினிஸ்டர்பிரசிடென்ட்டை சந்திக்கும் நிகழ்வு. NRWவின் மினிஸ்டர் பிரசிடென்ட் திரு. ஹென்ரிக் வுஸ்ட் என் மீது அன்புகொண்டு, நாங்கள் தங்கியிருந்த இடத்திற்குத் தனது அரசின் உயரதிகாரிகளுடன் தனது கான்வாயையும் அனுப்பியிருந்தார். **தமிழ்நாட்டின் முதலமைச்சரான உங்களில் ஒருவனான எனக்கு ஜெர்மனி நாட்டின்**



**ஒரு மாநிலத் தலைமை அமைச்சர் முழு மரியாதை அளித்து தன் இடத்திற்கு அழைத்ததை, தமிழர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட மரியாதையாகவே கருதுகிறேன்.**

பயண நேரத்தில், சென்னையில் மாண்புமிகு அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தலைமையில், அமைச்சர்கள் எஸ்.எஸ்.சிவசங்கர், கோவி.செழியன் ஆகியோர் பங்கேற்ற செய்தியாளர் சந்திப்பையும் அதில் நான்காண்டு காலத் தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்டுள்ள தேர்தல் வாக்குறுதிகள், வாக்குறுதி தராமலேயே நிறைவேற்றப்பட்ட முன்னோடித் திட்டங்கள் ஆகியவை குறித்து விளக்கப்பட்டதையும் கேட்டறிந்தேன். அதுபோல, இந்தியா மீது அமெரிக்க அதிபர் விதித்த வரிச்சுமையால் தமிழ்நாட்டின் தொழில் மற்றும் ஏற்றுமதி பாதிக்கப்படுவதைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் தி.மு.க.வும் தோழமைக் கட்சிகளும் திருப்பூரில் நடத்திய கண்டன ஆர்ப்பாட்டம் பற்றிய விவரங்களையும் கேட்டேன். ஜெர்மனி சாலைகளிலும் தமிழ்நாட்டு நினைவுகளே எனக்குள் பயணித்தன.

ஒன்றரை மணி நேரம் கழித்து, NRW மாநிலத்தின் தலைமைச் செயலகத்தை அடைந்தோம். வாசலிலேயே காத்திருந்து வரவேற்றார் மினிஸ்டர்பிரசிடென்ட் ஹென்ரிக் வுஸ்ட். கற்களால் பழமையாகக் கட்டப்பட்டிருந்த தலைமைச் செயலகக் கட்டடத்தின் உள்ளே சென்றால் அதிநவீனமாக இருந்தது. அங்கிருந்த விசிட்டர் புத்தகத்தில், “NRW தமிழ்நாடு இணைந்து வெற்றிபெறுவோம்” என எழுதிக் கையெழுத்திட்டேன்.

### திறன் வளர்க்கும் நான் முதல்வன்

முதலீட்டாளர் மாநாட்டை டசல்டோர்ஃப்பில் நடத்தியது பற்றியும் தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு உள்ள வாய்ப்புகள் குறித்து அறிந்ததையும் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார் ஹென்ரிக் வுஸ்ட். தமிழ்நாட்டுடன் எந்தெந்த வகையில் NRW இணைந்து செயல்படுவது என்பது குறித்து அவர் என்னிடம் ஆலோசித்தார். திறன் மிகுந்த பணியாளர்கள் பற்றி பேசும்போது, “நான் முதல்வன் திட்டம் என்பது எனது கனவுத் திட்டம். அதன் மூலம் பல இளைஞர்களுக்கும்



பெண்களுக்கும் நிறுவனங்களுக்கேற்ற திறன் பயிற்சி அளிக்கிறோம். உங்கள் நிறுவனங்களுக்கு தேவைப்படும் திறன் பயிற்சியை நான் முதல்வன் மூலம் அளித்து, அதற்கேற்ற பணியாளர்களை வழங்கத் தயாராக இருக்கிறோம்” என்றேன்.

தமிழ்நாட்டின் பாரம்பரியப்படி ஹென்ரிக் வுஸ்ட் அவர்களுக்குப் பட்டுத்துண்டு அணிவித்துச் சிறப்பித்தேன். பாரம்பரிய ஓவியம் ஒன்றையும் பரிசளித்தேன். அவரும் அவர்கள் மாநிலத்தின் பாரம்பரியப் பொருட்கள் அடங்கிய பரிசுக்கூடையை அன்புடன் வழங்கினார். அவரிடம் விடைபெற்று, திரும்பி வரும்போது வழியில் ஒரு தமிழர் நடத்தும் உணவகத்தில் சாப்பிட்டோம்.

### லண்டனில் தமிழ் விருந்து

ஏறத்தாழ தமிழ்நாடு அளவுக்கான மக்கள்தொகையைக் கொண்டுள்ள நாடான **ஜெர்மனிக்கு மேற்கொண்ட பயணத்தில் தமிழ்ச் சொந்தங்களுடனான சந்திப்பு, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**, NRW **மாநிலத்தின் தலைமை அமைச்சருடன் கலந்துரையாடல் எனத் திட்டமிட்டபடி வெற்றிகரமாக அனைத்தும் நிறைவேறிய மகிழ்வுடன், லண்டன் நகருக்கு விமானத்தில் பறக்கத் தொடங்கினேன்.**

அங்கே உலகப் புகழ்பெற்ற ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில், உலகின் ஒப்பற்ற சிந்தனையாளரான நம் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்துவைத்து, சுயமரியாதை இயக்க நூற்றாண்டை முன்னிட்டுப் புத்தகங்களை வெளியிட்டு உரையாற்றுகிறேன். லண்டனிலும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான முதலீட்டாளர்கள் சந்திப்பு உண்டு. அன்புடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் லண்டன் தமிழ்ச் சொந்தங்களைச் சந்திக்க ஆவலுடன் இருக்கிறேன்.

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

ஆவணி 18,
திருவள்ளுவர் ஆண்டு 2056
03- 09 - 2025.

---

நெல்லை மாவட்டம் ரூ.605 கோடி மதிப்பில்

## தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள்!

### சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு ஆய்வு!

நெல்லை, செப்.4–

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் (02.09.2025) அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை,களக்காடு சேரன்மகாதேவி,நாங்குநேரி, வள்ளியூர்,இராதாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 831 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.605 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள் தொடர்பாக சட்டபேரவைத்தலைவர் மு.அப்பாவு மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், தலைமையில் துறைசார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் சட்டப் பேரவைத்தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாளையங்கோட்டை,களக்காடு சேரன் மகாதேவி,நாங்குநேரி, வள்ளியூர் மற்றும் இராதாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 831 கிராமங்களுக்குட்பட்ட சுமார் 1 லட்சம் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் ரூ.605 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

தாமிரபரணி ஆற்றில் இருந்து மேலமுன்னீர்பள்ளம் பகுதியில் தண்ணீர் எடுக்கப்பட்டு,சிங்கிகுளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லும் பணிகள் முடிவடைந்துள்ளது.இதற்காக 297 மின்கம்பங்கள் அமைக்கப்பட்டு,மின் இணைப்பும் வழங்கப்பட்டுள்ளது. அங்கிருந்து தண்ணீர் பம்ப் செய்யப்பட்டு சோதனை ஓட்டமும் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது. மேலும் பிரண்டமலை பகுதிக்கும் தண்ணீர் கொண்டு செல்வதற்கான பணிகள் நிறைவடைந்துள்ளது.

இன்னும் இரண்டு வார காலத்திற்குள்,பிரண்டமலையிலிருந்து தெற்கு வள்ளியூரில் அமைக்கப்பட்டு வரும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிற்கும் தண்ணீர் கொண்டு செல்லப்பட உள்ளது.மீதமுள்ள அனைத்து பணிகளும் விரைந்து முடிக்கப்பட்டு, சோதனை ஓட்டம் நடத்தப்படும்.

அக்டோபர் மாத இறுதிக்குள் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு,குடிநீர் வழங்கப்படும் என துறைசார்ந்த அலுவலர்கள்,ஒப்பந்ததாரர்கள் உறுதியளித்துள்ளனர்.

இவ்வாறு சட்ட பேரவைத்தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் ராமலெட்சுமி உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர் கள் கலந்து கொண்டனர்.




கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், இளையனார் குப்பம் ஊராட்சியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு திட்ட முகாமில் தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு தலைமை தாங்கி முகாமை தொடங்கி வைத்து, பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களாக பெற்று, மனுதாரர்களுடன் கலந்துரையாடி விவரங்களை கேட்டறிந்து, பெறப்பட்ட மனுக்கள் மீது 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும் என்று உறுதி அளித்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்து, உடனடியாக தீர்வு காணப்பட்ட மனுக்களின் அடிப்படையில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி, திராவிட மாடல் அரசின் பல்வேறு சாதனை திட்டங்களையும் மக்களிடத்தில் எடுத்துரைத்தார், இம்முகாமில் பல்வேறு துறை சார்ந்த அரசு உயர் அதிகாரிகள், அலுவலர்கள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள், மனுதாரர்கள், பயனாளிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

---

## தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

*தஞ்சாவூர்.செப்.4.*

*தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் கும்பகோணம் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

*அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம், நாளை (05.09.2025 - வெள்ளிக்கிழமை) காலை 10:00 மணியளவில் கட்சி அலுவலகத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் க.நசீர்முகமது தலைமையில் நடைபெற உள்ளது. அதுசமயம் கூட்டத்தில் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகி கள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.*

*பொருள்: 1. “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை படிவம்.*

*2. கழக முப்பெரும் விழா.*

*3. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி ஆகியோரின் பிறந்தநாள் விழா.*

*4. கிளை கழகம் தோறும் கூட்டம் நடத்துவது.*

*5. கழக ஆக்கப் பணிகள்.*

*குறிப்பு: மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், கூட்டத்திற்கு வருகை தரும் போது அவசியம் சரி பார்க்கப்பட்ட பி.எல்.ஏ2 , பி.எல்.சி, பி.எல்.ஓ பட்டியலை தவறாது எடுத்து வரவும்.*

*இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.*





விழுப்புரம் மாவட்டம் அனந்தபுரம் பேரூராட்சியில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமினை முன்னால் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்துபொது மக்களின் மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு சான்றிதழ்களையும், கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், அனந்தபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் முருகன், துணைத் தலைவர் அமுதா கல்யாண் குமார், செயல் அலுவலர் கலையரசி உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.